# பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

## பொதுஅறிவுப் போட்டி 2010-2011

(மேற்பிரிவு)

1. வெப்பநிலையை அளக்கப் பயன்படும் சர்வதேச அலகு? செல்சியஸ். பரனைற்
2. இந்தியாவைக் கண்டு பிடித்தவர் யார்? Vasco de gama (வாஸ்கொடகாமா)
3. மனித இருதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன? 4
4. பிரான்சின் 5வது குடியரசின் முதலாவது ஜனாதிபதி யார்?
   Le général de Gaulle président de (1958 à 1969)
5. முதன்முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் யார்? இரவீந்திரநாத தாகூர்
6. யாழ்ப்பாணத் தோற்றத்தைக் குறிப்பிடும் நூல் எது? யாழ்ப்பாண வைபவமாலை
7. இலங்கையில் முதல் தமிழ் சபாநாயகர் யார்? சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி
8. ”மிதக்கும் நகரம்” எனப்படும் நகரம் எது? இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரம்.
9. மனிதனின் அடிப்படைத் தேவைகள் எவை? உணவு, உடை, உறையுள்.
10. பூமியின் நிழல் சந்திரன் மீது விழுவதை எப்படி அழைப்பர்? சந்திர கிரகணம்
11. வானில் மிதக்கும் பலூனில் நிரப்பப்படும் இரசாயன வாயு எது?
    ஐதரசன் அல்லது ஈலியம்
12. ஒரு வட்டம் வரைவதற்கு எத்தனை புள்ளிகள் தேவை? 1 (ஒன்று)
13. வியட்நாமியர்களால் “உடன்பிறப்பு” என்றும், சீனர்களால் “மக்கள் நண்பன்” என்றழைக்கப்படும் தாவரம் எது? மூங்கில்
14. பருத்தி விளைச்சலுக்கு ஏற்ற மண் எது? கரிசல் மண்
15. கங்கை ஆறும், யமுனை ஆறும் ஒன்று கூடும் இடம் எது? ஆலகாபாத்
16. யப்பானியரின் தேசிய உடை எது? கிமோனோ
17. முதன்மை நிறங்கள் எவை? CYAN, JAUNE, MAGENTA
18. சாதாரண ஒரு மனிதனின் (l'adulte) பற்கள் எத்தனை ? 32
19. உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட் எந்த நாட்டில் உள்ளது? எகிப்து

20. ஈழத் தமிழருக்கும், தென்னிந்தியத் தமிழருக்கும் இடையே வரலாற்றுக்கு முன்பிருந்த தொடர்புகள் எவை? குடியேற்றம், திருமணம், படையுதவி, வணிகம், பண்பாடு

21. Georges pompidou இன் நூல் நிலையம் எங்கே உள்ளது?
பரிசில் (Métro Rambuteau)

22. நெப்டியுனின் துணைக் கோள்கள் எத்தனை? 4

23. இலவச மருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்படும் CMU என்பதன் விரிவாக்கம் என்ன?
La couverture maladie universelle

24. நிலத்தில் வாழும் மிகப் பெரிய முலையூட்டி விலங்கு எது? ஆபிரிக்க யானை

25. கறையான் ஒரு நாளைக்கு எத்தனை முட்டை இடும்? 30,000 முட்டைகள்

26. உலகின் நுழைவு வாயில் என்று சொல்லப்படும் நகரம் எது? வான்கோவர்

27. மின் குமிழுக்குள் இருக்கும் எரியும் இழை எது? தங்குதன் இழை

28. மக்கள் வசிக்கிறார்களா என தேடப்படும் கண்டம் எது? அண்டார்டிக் கண்டம்

29. கொலம்பஸ் பயணம் செய்த கப்பலின் பெயர் எது? சாண்டா மரியா

30. காரின் இயந்திரம் அதிக வெப்பமடையாமல் காக்கும் கருவிகள் எவை? ரேடியேட்டர், வொன்திலாத்தர், நீர் ( Radiateur, Ventilateur, Liquide de refroidissement)

31. புறாவின் மூலம் செய்தியை அனுப்பலாம் என்று கண்டறிந்தவர்கள் எவர்? கிரேக்கர்

32. கண்ணாடி தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் எது? மணல்

33. இந்தியத் தேசியக் கொடியிலுள்ள அசோகச் சக்கரம் உணர்த்துவது எது? தர்மம்

34. இந்தியாவில் ஏழு கோபுரப் பட்டினம் என்று சொல்லப்படும் ஊர் எது? மாமல்லபுரம்

35. நீர் அருந்தாத விலங்குகள் எவை? எலி, கங்காரு

36. கதிர்களில் மிகவும் வலிமை வாய்ந்த கதிர் எது? லேசர் கதிர்கள்

37. ஒரு வானவில் தோன்றி மறைய சராசரி எவ்வளவு நேரம் எடுக்கும்? 3 நிமிடம்

38. உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரத்தின் உயரம் என்ன? 324 மீற்றர்

39. **La Toussaint** என அழைக்கப்படுவது பிரான்சில் என்ன மாதம் என்ன திகதி கொண்டாடப்படும் ? Novembre 1-ம் திகதி

40. காடுகளின் ராஜா எனப்படும் மரம் எது? தேக்கு

41. இறுதியாக நடைபெற்ற உலகக் கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டி (2010) எங்கு நடைபெற்றது? தென் ஆபிரிக்கா

42. ஐரோப்பிய ஒன்றியக் கொடியில் காணப்படும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை யாது? 12

43. இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டுத் தாக்குதலினால் அழிவுற்ற ஜப்பானிய நகரங்கள் எவை? கீரோசீமா, நாகசாகி

44. 162 இல் எத்தனை **(dizaines)** பத்துக்கள் உள்ளன? 16

45. தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார்? சுவாரிகின்

46. பிரான்சில் மெற்றோ **(Métro)** சுரங்கப் பாதை வழியான தொடருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு எது? 1900ம்ஆண்டு

47. மகாபாரதக் கதையில் கீதா உபதேசம் யாருக்கு யாரால் உரைக்கப்பட்டது? அருட்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணரால்

48. எண்களுக்குப் பதிலாக குறியீடுகளும், எழுத்துக்களும் பயன்படும் கணித முறை எது? அல்ஜிப்பிரா (அட்சரகணிதம்)

49. சனிக்கிரகத்தை ஆராய அமெரிக்கா தயாரித்துள்ள விண்கலம் ஒன்று? காசினி

50. வருடத்திற்கு ஒரு முறை மட்டும் மலரும் பூ எது ? மகிழம் பூ

51. உலகில் மிகப்பெரிய சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்

52.. திருப்புகழ்ப் பாடல்களை இயற்றியவர் யார்? அருணகிரிநாதர்

53. ஒரு இலக்கைத் தாக்கி விட்டு எறிந்தவன் கைக்குத் திரும்பி வரும் வளை தடியை எப்படி அழைப்பர்? பூமராங் கருவி

54. தாவரங்களும், மிருகச் சடலங்களும் உக்கிய பின் கிடைப்பது எது? கனியம்

55. நாயை விட பல மடங்கு மோப்பசக்தி கொண்ட உயிரினம் எது ? விலாங்கு மீன்

56. உலகின் மிக நீளமான அணை எது? ஹிராகுட

57. உலகின் முதல் தகவல்த் தொடர்பு செயற்கைக் கோள் எது? டெல்ஸ்டார்

58. நகத்தினால் கீறினால் தீப்பற்றிக் கொள்ளும் உலோகம் எது? ஸெரியம்

59. சிரியா நாட்டின் தலைநகர் எது ? டமாஸ்கஸ்

60. ஜெர்மனி நாட்டின் தேசிய மலர் எது? சோளப்பூ